சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஸ்ரீ ஆவணி ீ 26 ௳
(1889)

உ

பிரதி விலை: ருபா 12
செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

# இந்து சாதனம்

(HINDU ORGAN)

புத்தகம்: 113

சித்திரபானு வருடம் ஆடித் திங்கள் 08ம் நாள்
(24.07.2002) ஆடிப் பூரணை

இதழ்: 4

# நாவலர் மணிமண்டபம் அமைந்துள்ள காணியை இந்துசமய விவகார அமைச்சு பொறுப்பேற்றது

## நாவலர்பெருமான் குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட வேண்டும்

நாவலர்பெருமான் நிறுவிய அறக்கட்டளைகளுள் ஒன்றாகிய நல்லூர் சைவ மடாலயம் அமைந்திருந்ததும், பின்னர் தற்போது செயலற்றுவிட்ட நாவலர் சபை என்ற அமைப்பினால் நாவலர் மணிமண்டபம் அமைக்கப்பட்டு நாவலர் திருவுருவச்சிலை நிறுவப்பட்டதுமான ஐந்து பரப்பு பன்னிரண்டு குழி விஸ்தீரணம் உள்ள காணியைச் சில வாரங்களுக்கு முன் இந்து சமயவிவகார அமைச்சு பொறுப்பேற்றுக்கொண்டது.

நாவலர் மணி மண்டபம் புனரமைக்கப்பட்டு, அங்கு நல்லூர் திருவிழாக் காலங்களில் ஓதுவார்களைக்கொண்டு திருமுறை ஓதப்படுமென்றும், மணிமண்டபத்திற்கருகே இருபது இலட்ச ருபா செலவில் இன்னுமோர் மண்டபம் அமைக்கப்பட்டு அங்கு குரு பூசைகளும் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்படுவதாகவும் கௌரவ இந்து சமய விவகார அமைச்சர் திரு.தி. மகேஸ்வரன் கூறியுள்ளார். மணிமண்டபப் புனரமைப்பு வேலைகள் இப்போ நடைபெற்று வருகின்றன.

*வரலாறு*

நொத்தாரிஸ் எஸ். கந்தப்ப சேகரர் என்பவரால் 06.06.1874 ஆம் திகதி எழுதப்பட்ட 67ஆம் இலக்க உறுதிப்படி நல்லூரைச் சேர்ந்த சுப்பையர் கார்த்திகேய ஐயர் என்பவரிடமிருந்து அவருக்குச் சொந்தமான " அம்மையன் வளவு" என்றழைக்கப்படும் ஐந்து இலாச்சம் பன்னிரண்டு குழி பரப்பளவுள்ள காணி, சிவபூசை, குருபூசை ஆகியவற்றை ஒழுங்குசெய்து நடத்துதல், சிவபுராண படனங்கள் நடத்துதல், திருமுறைகளைப் பண்ணோடு ஓதுதல், ஓதப்பழக்குதல், சமயப் பிரசங்கங்கள் செய்தல் ஆகிய நோக்கங்களுக்கு உபயோகப் படுத்தப்படக்கூடிய சைவ மடாலய மொன்றை நிறுவும் நோக்குடன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களால் விலைக்குப் பெறப்பட்டது.

இக்காணியிலே வண்ணார் பண்ணை திரு.த. இராகவப்பிள்ளை, திரு. கு. செல்வவிநாயகம்பிள்ளை ஆகியவர்கள் உபகரித்த பொரு

(9ம் பக்கம் பார்க்க)

## திருத்தொண்டத் தொகை விரித்த பேரருளின் பெருமாள்

ஒரு மணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட் டாட்கொண்ட வுவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட வல்லாள னெல்லாமுய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த பேரருளின் பெருமாளென்றுந்
திருமணக்கோ லப்பெருமாண் மறைப்பெருமா ளெமதுகுல தெய்வமாமால்

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை:
ஆடிச்சுவாதி (14.08.2002) புதன்கிழமை

# ஆறுமுகநாவலர் முதல் பண்டிதமணி வரை சைவம் வளர்த்த சான்றோர்கள் - 18:

# சைவப்பெரியார் புலோலியூர் சிவபாதசுந்தரனார்

(புத்தகம் 113 இதழ் 3 இன் தொடர்ச்சி)

ஆறுமுக நாவலர் பெருமானைத் தமிழறியாதவர்களும் அறிந்து கொள்வதற்காக ஆங்கிலத்தில் *"Arumuga Navalar"* எனும் சிறிய நூலை ஆக்கி வெளியிட்டார்.

*"Glories of Shaivaism"*

> சைவப்பெரியார் நினைவுநாள்
> ஆடி அத்தம் (12.08.2002)

(சைவத்தின் மகத்துவம்) என்ற ஆங்கில நூலே பெரியாரது இறுதி எழுத்தாக்கமாக அமைந்தது. இந்நூல் பெரியாரது ஒன்றுவிட்ட சகோதரன் கலாநிதி கு. சிவப்பிரகாசம் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி 1952 மார்கழியில் எழுத ஆரம்பிக்கப்பட்டது. உடல் மிகத் தளர்ச்சியுற்றிருக்க உள்ளம் தளரா நிலையில் எழுதி முடிக்கப்பட்ட இவ்வாக்கம் நூலுருவில் வெளிவரும்வரை அந்தப் புண்ணிய ஆன்மா உடலில் தரித்து நிற்கவில்லை. உடற் தளர்ச்சி காரணமாகவும் இந்நூலை எழுதி முடிக்க வேண்டுமென்ற திட சங்கற்பம் காரணமாகவும், எண்ணியிருந்தபடி திருப்பெருந்துறைக்கும் சிதம்பரத்துக்கும் யாத்திரை செல்ல முடியவில்லை.

**இந்திய அறிஞர் தொடர்புகள்:**

சைவப் பெரியாருடைய குடும்பம், சமயத் தொடர்பால், பல தமிழகக் குடும்பங்களுடன் பல தலைமுறைகளாக நட்புரிமை பூண்டிருந்தது. பெரியார் ஆக்கிய நூல்கள் மேலும் பல தமிழகச் சித்தாந்த அறிஞர்கள் சைவப் பெரியாருடன் தொடர்புகளை ஏற்படுத்த வழிவகுத்தது.

சைவப் பெரியாரது திருவருட் பயன் விளக்கவுரையை 'இந்து சாதனம்' மூலமாக அறிந்து கொண்ட திருமயிலை சே.வெ.ஜம்புலிங்கம் அவர்கள் அதன் பிரதியை வரவழைத்துப் படித்து மகிழ்ச்சி அடைந்து சைவபோதம் முதலாம், இரண்டாம் புத்தகங்களையும் வரவழைத்துப் படித்து, மெச்சி சித்தாந்தம் என்ற தமிழக சமய சஞ்சிகையில் மதிப்புரை ஒன்று வெளியிட்டனர்.

1920ஆம் ஆண்டுக்கும் 1923 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சமயம், சைவசமயம், சிவபெருமான், விரதம், சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர், சந்தனாசாரியர் என்ற தலைப்புகளில் சிலவற்றைத் தாமும் சிலவற்றைத் திரு. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்களைக் கொண்டும் எழுதுவித்து சிறுதுண்டுப் பத்திரிகைகளை அச்சிடுவித்து இலவசமாக விநியோகித்தார்.

1941ஆம் ஆண்டில் தமிழகத்தில் சிவஸ்தல யாத்திரையாகச் சென்றிருந்த சமயம் தமிழக அறிஞர் தொடர்பு வலுப்பெற்றது. 1944ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபைத் தலைவராக இருந்த சமயத்தும் முன்பும் பின்பும் தமிழகச் சித்தாந்த அறிஞர்கள் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் நடாத்தும் சைவ மகாநாடுகளுக்கு வருகைதந்து தலைமை தாங்கும் ஒழுங்குகளைச் செய்து கொடுத்தார்.

1945ஆம் ஆண்டில் பிகூஷாண்டார் கோவில் பெருநிலக்கிழார் ராவ் பகதூர் கோ. இராசகோபால பிள்ளையவர்களின் "ஆனந்த விலாச" மாளிகையில் சிலநாட்கள் தங்கியிருந்து இராசகோபால பிள்ளை அவர்களுக்குச் சிவஞான சித்தியார் பாடம் சொல்லி வந்தார். அவர் கேட்டுக்கொண்டபடி சைவ சமயசாரம் என்ற நூலை எழுதிக் கொடுத்தார். தமிழகத்தில் தங்கியிருந்த சமயம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து ஈழத்து இளைஞர் மன்றத்தின் சார்பில் 'புராணங்களின் பெருமையும் அருமையும்' என்னும் பொருளில் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் தலைமையில் விரிவுரை நிகழ்த்தினார்.

1948ஆம் ஆண்டில் தருமபுர ஆதீனத்தாரால் அழைக்கப்பட்டு அங்கே சில நாளும் சிதம்பரத்தில் சில நாளும் தங்கி நல்லசாமிப் பிள்ளை அவர்களின் சிவஞான சித்தியார் ஆங்கில மொழிபெயர்ப்பைத் திருத்தியும் புதுப்பித்தும் அச்சிடுவித்தார்.

வல்வெட்டித்துறை அம்மன் கோவிலில் தங்கி தொடர்கதாப்பிரசங்கம் செய்து கொண்டிருந்த திருமுருக. கிருபானந்தவாரியார் பல முறை பெரியாரிடம் சென்று சித்தாந்த சாஸ்திரங்களிலுள்ள பல ஐயங்களை நீக்குவித்துச் சென்றுள்ளார்.

பேராசிரியர் சி.நாராயண மேனன் என்பவர் விக்ரோறியாக் கல்லூரியில் சைவப்பெரியார் அதிபராக இருந்த காலத்தில் அவரின் கீழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவர் பின்னர் பண்டித மதன்மோகன் மாளவியா காசியில் நிறுவிய இந்துப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராக நியமனம் பெற்றுச் சென்றிருந்தார். கலாநிதி சி. நாராயணமேனன் அவர்கள் சைவப்பெரியாருக்கு 09.06.1933ஆம் திகதி கடிதமொன்று எழுதியிருந்தார். அதில் அப்பல்கலை



க்கழகத்தின் உப அதிபர் இளைப்பாறப் போவதாகவும் அவர் வகித்த பதவியை ஏற்கத் தகுதியுடையவர் பெரியார் அவர்களே என்றும் ஆதலின் சில காலம் அதையேற்று அப்பல்கலைக் கழகத்திற்குத் தொண்டாற்றுமாறும்

(12ம் பக்கம் பார்க்க)

# சித்தாந்த பேரறிஞர், இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா அவர்கள் அமரரானார்

## ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு

சைவ சித்தாந்தத்தைக் கற்பதற்கும், கற்பிப்பதற்கும், ஆராய்வதற்கும் பரப்புவதற்கும் தன் வாழ்நாளை அர்ப்பணித்துச் செயற்பட்டவரும் ஒப்புயர்வற்ற சித்தாந்தப் பேரறிஞராக சைவவுலகெங்கும் போற்றப்பட்டவருமான இலக்கிய கலாநிதி பண்டிதர் மு.கந்தையா அவர்கள் ஆனித் திங்கள் இருபத்தாறாம் நாள் (10.07.2002) அயரா அன்பின் அரன் கழல் அணைந்தமை சைவத் தமிழ் உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். சைவ சித்தாந்தத் துறையில் பண்டிதர் போன்று புலமைத்துவம் பெற்றவர்களை இன்று காணமுடியாது.

யாழ்ப்பாணத்தில் ஏழாலை என்ற கிராமத்தில் 1917ஆம் ஆண்டு யூன் மாதம் 19ஆம் நாள் பிறந்த பண்டிதர் அவர்களின் பாடசாலை வாழ்க்கை எட்டாம் ஆண்டுப் படிப்புடன் முடிவுற்றது. பின்னர் ஏழாலையில் வாழ்ந்த அருளானந்த சுவாமி (சித்தாந்தக் கடல் ஐ. பொன்னையா) போன்ற சித்தாந்த விற்பன்னர்களிடம் சைவ சித்தாந்தத்தை ஆழமாகக் கற்றுக் கொண்ட பண்டிதர் அவர்கள் சுயமாகவே வீட்டிற் கற்று சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார். தாமாகவே வடமொழி, ஆங்கில மொழிகளைக் கற்றுக் கொண்ட பண்டிதர் அவர்கள், ஆசிரியத் தேர்வுபெற்று, 1938 இல் ஏழாலை சன்மார்க்க வித்தியாசாலையில் ஆசிரியப் பணிபுரியத் தொடங்கினார். 1943ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதரானார். 1952இல் கொழும்பு பல்கலைக் கழகத்தின் தமிழ் டிப்புளோமா பட்டம் பெற்றபின் - நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் பணிபுரிந்த காலகட்டத்தில் - இலண்டன் பல்கலைக்கழகத்தின் இளங்கலைமாணி பரீட்சைக்கு வடமொழியைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு தோற்றி தேர்ச்சி பெற்றார். 1959ஆம் ஆண்டுமுதல் 1973ஆம் ஆண்டு இளைப்பாறும் வரை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

1945ஆம் ஆண்டு ஞானலட்சுமி என்னும் மாதரசியைத் தம் வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்ட பண்டிதரையா அவர்கள்,

(6ம் பக்கம் பார்க்க)

# தத்துவ உலகில் தடம் பதித்த மேதை பண்டிதர் மு. கந்தையா

தத்துவ உலகில் தனக்கென ஒரு இடம் பிடித்தவர் பண்டிதர் மு. கந்தையா அவர்கள். அண்மையில் காலமான இவ்வறிஞர் ஏழாலை ஊரில் பிறந்தவர். தான் பிறந்த ஈழத்திலும் தமிழகத்திலும் பிறநாடுகளிலும் அறிஞரின் நன்மதிப்பைப் பெற்ற மேதை இவர்.

பண்டிதர் பிறந்த ஏழாலை ஊர் சைவத்தமிழ்ப் பாரம்பரியம் மிக்கது. அந்தப் பாரம்பரியத்திலே வந்த பண்டிதர் தமது சமய நெறியைப் பின்பற்றுவதில். உறுதியும் கொள்கைத் தெளிவும் கொண்டிருந்தார். அமைதியாக இருந்து, தனிமனிதனாக அரும் பெரும் பணிகள் ஆற்றினார்.



ஆறுமுக நாவலருக்கு உறுதுணையாக நின்று பல பணிகள் செய்தவர் குப்பிழான் கிராமத்தில் பிறந்த காசிவாசி செந்திநாதையர். செந்திநாதையரின் வேதாகம நூல்களின் ஆராய்ச்சி முடிவுகளாலும் திருமுறை விளக்கங்களாலும் ஈர்க்கப்பட்டவர் பண்டிதர். புன்னாலைக் கட்டுவனில் பிறந்த மகாவித்துவான் கணேசையரின் தமிழ்ப் புலமையால் கவரப்பட்டு, அவரைத் தன் மானசீகக் குருவாகக் கொண்டவர். இவர்களைப் போன்ற ஈழத்தமிழ் அறிஞர் பலரும் பண்டிதரின் ஞான வாழ்வில் தடம் பதித்தனர். தத்துவ உலகில் தடம்பதித்த மேதையாகப் பண்டிதர் விளங்கினார்.

இன்று ஆராய்ச்சியிலும் திறனாய்விலும் ஈடுபடுபவர், பொதுவாக, மேற்கத்திய அறிவியல் அணுகுமுறைகளைப் பின்பற்றுவதைப் பார்க்கலாம். ஆராய்ச்சிக்கு வேண்டிய அறிவியல் நோக்கும் சிலரிடம் இருப்பதில்லை. இதனால் அவரின் ஆய்வு முடிவுகள் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படாத நிலை பிறக்கிறது.

முன்பிருந்த ஈழத்தமிழ் அறிஞர்கள் மேற்கத்திய ஆய்வு முறைகளை அறிந்திருக்கவில்லை. ஆயினும், அவர்களின் ஆய்வு முறைகளும் முடிவுகளும் அறிவியல் சார்ந்ததாக இருந்தன. அவை தமிழ்மரபு வழிவந்த அணுகுமுறையில் அமைந்து சிறப்புற்றன. பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் எழுத்துக்கள் இதற்கொரு எடுத்துக்காட்டு. பண்டிதர் கந்தையாவின் ஆராய்ச்சி அணுகுமுறை இத்தகைய தமிழ் அறிஞரின் வழியையும், மேலை நாட்டறிஞரின் அணுகுமுறையையும் கொண்டு சிறப்புற்றது.

**சித்தாந்தரத்தினம் கலாநிதி க. கணேசலிங்கம்**

தமிழிலுள்ள நூல்களை, குறிப்பாகச் சித்தாந்தநூல்களை ஆய்வு செய்தற்கும், தெளிவாக விளங்குதற்கும் மேலைநாட்டுத் திறனாய்வு முறை மட்டும் போதாது, அது குறையுடையது என்பது பண்டிதரின் கருத்து.

அவரின் "சித்தாந்தச் செழும்புதையல்" என்ற நூலில் இது தெளிவாகத் தெரிகிறது. "உண்மை விளக்கம்" என்ற சைவசித்தாந்த நூலின் ஒரு பாடல், முத்தியில் இன்பத்தைத் தருபவன் இறைவன், அதனை அனுபவிப்பது ஆன்மா, அதனை விளைவிப்பது ஆணவம் என்று கூறுகிறது. உயிரின் ஆற்றலை மறைத்துக் கேடுசெய்யும் ஆணவம் எங்ஙனம் முத்தியில் இன்பத்தைக் விளைவிக்கும்? என்ற கேள்வி எழுகிறது.

இது தத்துவ அறிஞருக்கு விளங்காத புதிராய், பல்வேறு விளக்கங்களுக்கு இடமளிக்கிறது. புகழ்பெற்ற தத்துவ அறிஞர்கள் தரும் விளக்கங்கள் வலிந்து காணப்பட்டவையாய் இருக்கின்றன. ஆனால் பண்டிதர் தரும் விளக்கம் அறிவியல் தமிழ் சார்ந்ததாக, சித்தாந்த உண்மையை உள்ள படி உரைப்பதாக உள்ளது. பலவாறு விளக்கியபின், தமிழ்க்கவிதை அமைப்பைக் கைக்கொண்டதன் மூலம், குறிப்பிட்ட அடிக்கு அவர் பொருள்

(4ம் பக்கம் பார்க்க)

# தத்துவ உலகில்.........................

காணுகிறார். திருக்குறட்பாவொன்றை உதாரணம்காட்டி, 'மழை பெய்யாமல் கேடு விளைத்தல் போல், ஆணவம் மறைப்பைச் செய்யாமல் இன்பம் விளைக்கிறது" என்று அவர் நிறுவும் பாங்கு, அவரின் சித்தாந்தத் தெளி விற்கும், தமிழ்ப்புலமைக்கும், அறி வியல் நோக்கிற்கும் சான்று பகர்வது. இது போன்ற உதாரணங்களால் சித்தாந்த முடிவுகள் பலவற்றை அவர் விளக்கியுள்ளார். இது பண்டிதருக்கே உள்ள தனிப் பண்பு.

சைவசமயக் கருத்துக்களைக் கூறுபவர் பலர், அவை வேதங்களில் உள்ளன, ஆகமங்களில் உள்ளன என்று கூறுவதுண்டு. ஆனால் எந்த வேத நூலையும், ஆகமநூலையும் குறிப் பிட்டுச் சொல்வது அரிது. பண்டிதர் தான் மேற்கோள்காட்டும் வேதாகமக் கருத் துக்களைக் குறிப்பிட்ட நூல்களின் பெயர்கள் கூறி விளக்குவதைக் காண லாம். அவருக்குள்ள மும்மொழி அறிவு இதற்குத் துணை புரிந்துள்ளது. சைவ சித்தாந்த நூற்கருத்துக்களை, வேதாகம நூற்கருத்துக்களை ஆதாரமாகக் காட்டி விளக்குவது இவரின் தனித்திறமை. இத்திறமை கொண்டவரை இன்று ஈழத்திலும் தமிழகத்திலும் காண்பதரிது.

சைவத்துக்கு உடன்பாடற்ற கருத்துக்கள் பல வேத உபநிடதங் களில் பின்னாளில் புகுத்தப்பட்டன. வேதாந்திகள் உபநிடதக் கருத்துக் களைத் திரித்துக்காட்டிய இடங்களும் உண்டு. இவற்றை ஆராய்ந்து வெளிக்கொணர்ந் தவர் செந்திநா தையர். இந்த அறிஞரைப் பின்பற்றி, பண்டிதர் தந்த விளக்கங்கள் பல. அவை சைவசித்தாந்தக் கொள்கை பற்றிய மயக்கங்களைத் தீர்த்தன. வேதாகம நூல்களின் உண்மைக் கருத்துக்களை வெளிக்கொணர்ந்தன.

தமிழ்த் திருமுறைகளுக்கு உயர்ந்த இடமளித்தவர் நாவலர் பெரு மான். அவரின் வழியில், சித்தாந்தம் கண்ட முடிந்த முடிபுகளைத் திருமுறை களிற் கண்டு விளக்கிய பெருமையும் பண்டிதரைச் சாரும்.. இதனை அவரின் நூல்களில் பரவலாகக் காணலாம்.

சைவக் கிரியைகளின் உள் ளார்ந்த பொருள் தெரியாது அவற்றைக் கைக்கொள்வதில் பயனில்லை. கிரியைகளில் பாவனையும் ஈடுபாடும் அவசியம். இதற்கு அவை குறித்த அறிவு முக்கியம். " சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள் " என்ற அவரின் நூல் சமயச்சடங்குகளுக்கு தத்துவ விளக்கம் அளிக்கிறது.

'சித்தியார் திறவு கோல் " என்ற நூல் சைவசித்தாந்தம் படிக்கும் மாணவருக்கும், அறிஞருக்கும் மிகவும் பயன்தருவது. சிவஞானசித்தியார் கூறும் பல நுட்பமான கருத்துக்களைத் தெளி வாக விளக்குகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் அவர் ஆற்றிய திருவாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை, யாழ்ப்பாணத்து சித்தாந்த மேதைகள் பதித்த சுவடுகளைச் சுட்டிக்காட்டு கிறது. ஈழத்துச் சைவசித்தாந்த பாரம் பரியத்தின் முன்னோடியான ஞானப்பிர காசர் நாவலருக்கு முன் வாழ்ந்தவர். அவரின் சித்தியார் உரையில் சிவசம வாதத்தைப் புகுத்தியுள்ளார் என்று சித்தாந்தப் பேரறிஞர் சிவஞானமுனிவர் போன்றோரால் கண்டிக்கப்பட்டவர் அவர். இது தவறானது என்றும், ஞானப்பிரகாசரின் கருத்து சிவசமவா தத்தைக் கொண்டதல்ல என்றும் நிறுவி, சித்தாந்த உலகில் முத்திரை பதித்தவர் பண்டிதர்.

பண்டிதரின் "சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி" என்ற நூல், பல அரிய சித்தாந்தக் கருத்துக் களைக் கொண்டு வரலாற்று நூலாகவும் திகழ்கின்றது. அவரின் நுண்மாண்நுழை புலத்துக்கு அரண் செய்வது இந்நூல்.

இந்திய மதங்களை இந்து சமயம் என்று குறிப்பிடும் வழக்கம் அன்னியராட்சியில் வந்தது. இந்து சமயம் என்று ஒரு தனிச்சமயம் இல்லை. அதற்கென்று ஒரு தனித் தத்துவமோ கொள்கையோ கூட இல்லை. இந்து சமயம் என்ற பெயரில் இன்று சைவத் துக்கு உடன்பாடற்ற கொள்கைகளும் வழிபாட்டு முறைகளும் புகுத்தப்படு கின்றன. சைவக்காவலராகத் திகழ்ந்த ஈழத்து அந்தணர் குலத்தவர் சிலர் இவற்றைப் புகுத்துவதும், சைவ சமயத் தவர் மத்தியில் செல்வாக்கு மிக்கவர் சிலர் இதனை ஆதரித்து ஊக்குவிப்ப தும் பண்டிதர் மனதைப் பெரிதும் பாதித்தது. சைவத்தைச் சிதைக்கும் இந்தச் செயலை மாற்ற அவர் எழுதிய கட்டுரைகள் பல. "சைவத்தமிழ் அறிவியல் பண்பாட்டு இயக்கம்" என்ற பெயரில், தனது தள்ளாத வயதில், பல கட்டுரை களை வெளியிட்டார்.

ஈழத்தில் சைவம் இன்றிருக்கும் நிலையை எண்ணி வேதனைப்பட்ட பண் டிதர், "சைவசித்தாந்த மன்றம்" ஒன்று அமைத்துச் சைவத்தைப் பேண விரும் பினார். சைவமக்கள், குறிப்பாக இளை ஞர்கள், தமது சமயத்தை அறிந்து, ஈழத்துச்சைவ பாரம்பரியத்தைப் பேண வேண்டுமென்பதும், அதற்கு அவர் உரு வாக்க எண்ணிய 'சைவசித்தாந்த மன் றம்" துணைபுரிய வேண்டும் என்பதும் அவரின் கடைசிக்கால விருப்பமாக இருந்தது. இதனை அவரின் கட்டுரை கள் மூலமும், இக்கட்டுரை ஆசிரிய ருக்கு எழுதிய கடிதங்கள் மூலமும் அறிய முடிகிறது. *

---

நின் காட்சி பெறுமாறு

## தையலே மெய்ஞ்ஞான ஆட்சி தந்தருள்

ஊனாயுயிரா யுயிர்க்கு ளுயிராகித்
தானாகி நின்றருளுந் தையலே - பூநாறும்
மட்டார் குழலும் மணிச்சுட்டி யுந் திலதப்
பொட்டார் நுதலும் பொலன்குழைசேர்ந் - திட்டவிரு
காதிலணி தோடுங் கருணைபொழி வேல் விழியுங்
கோதிமுக் குத்திமுகச் சுந்தரமும் - தாதவிழும்
முல்லை யரும்பின் முகிழ்நகையுஞ் செவ்வாயும்
நல்லதிரு மாங்கல்ய நற்கழுத்தும் - மல்லலணி
பூங்கணையை வென்ற புயநான்குஞ் பொற்சரியைத்
தாங்கிய செங்கைச் சரோருகமும் - பாங்கமைய
விட்ட பதக்கத் தெழுங்கிரண முஞ்செழும்பொற்
கட்டுவட மேந்துங் கனதனமும் - ஒட்டியபேர்
அண்டமெலாம் பெற்றிடுசிற் றாலிலையை நேர் வயிறும்
தண்டரள மேகலைகள் தாழ்மருங்கும் - தண்டை
சிலம்பு சதங்கை திகழ்பா டகமும்
புலம்புமலர்த் தாளிணையும் பூவே - மலர்ந்தது போற்
றோன்றுந் திருவடியுந் தூய நலம்பொலியும்
ஆன்ற மதிகண் டகமகிழத் - தோன்றருநின்
காட்சி பெறுமாறு கருணையளி மெய்ஞ்ஞான
ஆட்சிதனை நீ தந்தருள்.

- தையல்நாயகி கலிவெண்பா

வண்ணை அருள்மிகு வைத்தீஸ்வரன் கோவில்
தையல்நாயகி அம்மையின் ஆடிப்பூர மகோற்சவம்:

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 02.08.2002 | வெள்ளிக்கிழமை |
| தேர் | 10.08.2002 | சனிக்கிழமை |
| தீர்த்தம் | 11.08.2002 | ஞாயிற்றுக்கிழமை |

# சிதம்பரம் புண்ணியநாச்சி மடம் - பெரும் வரப்பிரசாதம்

*சி.த. மார்க்கண்டு, B.A., SLAS-*

*(முன்னாள் வவுனியா அரச அதிபர், வடகிழக்கு மாகாணசபையின் விவசாய காணி, நீர்ப்பாசன அமைச்சின் இளைப்பாறிய செயலாளர்)*

சிதம்பரம் புண்ணியநாச்சி மடம், சேக்கிழார் கோயில் பற்றி இந்து சாதனம் காலத்துக்குக் காலம் வெளியிட்ட செய்திகளை வாசித்த ஈழத்தவர் பலரும் சிதம்பர தரிசனத்திற்குச் செல்லும்போது புண்ணியநாச்சி மடத்தில் தங்கியிருந்து சிதம்பர தரிசனத்துடன் சேக்கிழார் கோவிலிலும் வழிபாடாற்றி வருகின்றனர். இவ்வாறு சிதம்பரம் சென்றுவந்த பலரும் புண்ணியநாச்சி மடத்தின் புதிய கட்டடம் ஈழத்து யாத்திரிகர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. என்று நேரடியாகவும் கடித மூலமும் பாராட்டுத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற கடிதங்களில் ஒன்றை இங்கு பிரசுரிக்கிறோம்.

– *ஆசிரியர்.*

நான் எனது குடும்பத்துடன் இவ்வருடம் மே மாதம் தமிழ்நாட்டிற்கு யாத்திரையாகச் சென்று யூன் மாதம் நாடு திரும்பினேன்.

இந்து சாதனம் மூலமும் வேறோர் செய்திப்பத்திரிகை மூலமும் சிதம்பரத்தில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் நிர்வகிக்கும் புண்ணியநாச்சியம்மையார் மடம் புதிதாகக் கட்டப்படுவதாக அறிந்தேன். ஆகவே சிதம்பரம் செல்லும் போது புண்ணியநாச்சி அம்மை மடத்தையும் பார்வையிட ஆவலாக விருந்தேன்.

நாம் சிவகாமி அம்மை சமேதராக அருள்பாலிக்கும் சிதம்பர சபாநாயகர் கோவிலுக்கு 28.05.2002 ஆம் திகதி காலையில் சென்று கூத்தப்பெருமானைத் தரிசித்தோம். வழிபாடுகள் முடிந்தபின் தீட்சிதர் ஒருவரிடம் கேட்டு, புண்ணியநாச்சி அம்மை மடம் பற்றி அறிந்து கொண்டோம். அவர் கூறிய குறிப்பைக் கொண்டு மாலைகட்டித் தெருவை அடைந்தோம். எங்களுடன் திருகோணமலையில் இருந்து திரு. எஸ். சுந்தரலிங்கம் குடும்பத்தினரும் வந்திருந்தனர்.

அழகாக அமைக்கப்பட்டு, வேலைகள் முடியும் தறுவாயில் இருந்த அக்கட்டடத்தைக் காணப் பெருமிதமாகவிருந்தது. அறைகளைச் சைவ அன்பர்கள் தமது உறவுகளின் ஞாபகார்த்தமாக இலவசமாகக் கட்டிக் கொடுத்துள்ளனர். மேல் மாடியில் மண்டபம் அமைந்துள்ளது. மிக அழகுறக்கட்டப்படுகிறது. தேவையான சகல வசதிகளையும் கொண்டுள்ளது. பெறுமதி மிக்க ஒன்று. இந்தக் கட்டடம் சம்பிரதாய பூர்வமாக 16.06.2002 இல் திறந்து வைப்பதற்கு அப்போ அழைப்புகள் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.த.சண்முகலிங்கம் அவர்கள் இந்நடவடிக்கைகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தார். எமக்கும் அழைப்பிதழ் கிடைத்தது.

திரு. த. சண்முகலிங்கம் அவர்களைப் பார்த்தது எமது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியது.



சைவத்தொண்டராகவும், சமூகத் தலைவராகவும், நல்லவராகவும் வல்லவராகவும் காட்சியளித்தார். அவருடைய தோற்றம் ஆஜனுபவனாக இருந்தது. பேசப்பழக இனியவராக அன்பும் பண்பும் நிறைந்தவராக இன்முகத்துடன் காணப்பட்டார்.

திரு. த. சண்முகலிங்கம் அவர்களிடம் எமது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் ஆரம்பித்து நடத்திய சிதம்பரம் பாடசாலை மற்றும் சேக்கிழார் கோவிலின் இன்றைய நிலை பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொண்டோம். அவை நாவலர் அறக்கட்டளையின் பொறுப்பில் உள்ளன. வித்தியாசாலை நல்ல முறையில் நடைபெறுகிறது. புண்ணியநாச்சி மடத்தின் இரு பக்கங்களிலும் வித்தியாசாலைக்கு நிலங்கள் உண்டு.

மடத்தின் பொறுப்பாளராக திரு. ஞானஸ்கந்தன் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். திரு.ஞானஸ்கந்தன் இளையவர். இனிய சுபாவம் கொண்டவர், எளிமையானவர், அடக்கமும் சீரிய குணமும் அவரிடத்தே காணப்பட்டது.

இலங்கையிலும் பிற நாடுகளிலும் இருந்து செல்லும் சைவ அடியார்கள் தங்கிச் செல்ல சிறந்த வசதிகள் படைத்த இடமாக புண்ணியநாச்சி மடம் கட்டப் பட்டுள்ளது. இது ஒரு வரப்பிர சாதமாகும். இதனைக் கட்டு வித்த சைவ பரிபாலன சபைக்கும் அர்ப்பணிப்புடன் செயற்படும் திரு. சண்முகலிங்கம் அவர்களுக்கும் சைவ உலகம் கடமைப்பட்டுள்ளது. சைவ பரிபாலன சபையின் சேவை மெச்சிப் போற்றி வாழ்த்துதற் குரியது. இது ஒரு சாதனை. சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சி. இப்படியான நன்முயற்சிகள் இன்னும் நடைபெற வேண்டும்.

தமிழ் நாட்டில் எமது சைவ பரிபாலன சபையின் தொண்டுகளின் வெற்றி, தமிழக அரசினதும் சைவ அன்பர்கள் - குறிப்பாக சிதம்பரம் வாழ் சைவ அன்பர்களது - புரிந்துணர்வு, ஆதரவு, உதவி, ஒத்தாசை ஆகியவற்றில் பெரிதும் தங்கியுள்ளது.

இந்தப் புண்ணிய கைங்கரியத்தைச் செய்துவரும் சைவ பரிபாலன சபையினர், அவர்கட்கு உதவியாகவுள்ள திரு.த. சண்முகலிங்கம், திரு. ஞானஸ்கந்தன் போன்றவர்கள் நலமுடன் வாழ்ந்து இறைபணி, சமூகப்பணி, தொண்டுகள் பல தொடர்ந்து செய்ய எல்லாம் வல்ல கூத்தப் பெருமானை வேண்டி இறைஞ்சுகிறேன். *

# சித்தாந்தப் பேரறிஞர் ...............

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தந்தையாக ஏழாலை மேற்கில் அமைந்த சத்திமுற்றம் என்ற இல்லத்தில் வாழ்ந்தார். இவ்வில்லம் பண்டிதரையாவிடம் சைவசித்தாந்த விளக்கம் பெறவரும் மாணவர்கள், அறிஞர்களினால் எப்போதும் களைகட்டியிருக்கும்.

பாடசாலைக்கு வெளியே,பல வேறு நிறுவனங்களில் பண்டிதரையா அவர்கள் சைவ சித்தாந்தம், தமிழ் இலக்கண இலக்கியம், வடமொழி ஆகியவற்றை இலவசமாகக் கற்பித்துள்ளார். நல்லை ஆதீனம், மானிப்பாய் இந்து சமய அபிவிருத்திச் சங்கம், மல்லாகம் பண்டித மாணவர் கழகம், நாவலர் மணி மண்டபம், சிவதொண்டன் நிலையம், அளவெட்டி சுப்பிரமுனிய சிவாச்சிரமம், கிளிநொச்சி ஆதாரக் கல்விக் குருகுலம், கீரிமலை சிவநெறிக் கழகம், நாவலர் ஆச்சிரமம் ஆகியன இவற்றுட் சில.

பண்டிதரையா அவர்கள் பல நூல்களை எழுதியுள்ளார். சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள் (1978), சித்தாந்த செழும் புதையல்கள் (1978), அரியவும் பெரியவும் (இரு பாகங்கள் 1983 - 84), சிவாலய சேவை ஏன்? எப்படி? (1986), சைவ சித்தாந்தத்தில் மாயை (1989), சித்தியார் திறவுகோல் (1991), திருக்கேதீச்சர மான்மியம் (இரு காண்டங்கள்) (1998 - 1992), பெரிய புராண சூசனம் (அப்பூதியடிகள் முதல் வெள்ளானைச் சருக்கம் முடிய) (1993) ஆகியன குறிப்பிடத் தக்கன.

இவை தவிர, நாவலர் பிள்ளைத் தமிழ் மற்றும் ஐந்து பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங் கள் உட்படப் பல சிற்றிலக்கியங்கள் அவரது காவியப்புலமைக்கு எடுத்துக் காட்டாக அமைந்தவை.

பெரியபுராணத்திற்கு நாவலர் பெருமான் காரைக்காலம்மையார் புராணம் வரை சூசனம் எழுதியிருந்தார். மிகுதிப் புராணங்களுக்கான சூசனம் (அப்பூதியடிகள் நாயனார் முதல் வெள்ளானைச் சருக்கம் வரை) நாவலர் சிவபதமடைந்து நூறாண்டுகள் வரை எழுதப்படாதிருந்தது. 1993 ஆம் ஆண்டு மலேசியாவிலுள்ள கோலாலம்பூர் சைவ சித்தாந்த நிலையத்தினர் பண்டிதரையா அவர்களே இதனை எழுதி முடிக்கத் தகுதியானவர் எனக்கண்டு, அவரைக் கொண்டு மிகுதிப் புராணங்களுக்கும் சூசனம் எழுதுவித்து வெளியிட்டனர்.

திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபராக விளங்கிய சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனைகளை விரிவாக விளக்குவதற்குப் பொருத்தமான அறிஞர் பண்டிதரையா அவர்களே என இனங்கண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூதவை அவரிடம் அப்பணியை ஒப்படைத்தது. பல்கலைக் கழக அழைப்பை ஏற்று கைலாசபதி அவர்களுடைய சிந்தனைகளை விரிவாக விளக்கி, சைவசித்தாந்த நோக்கிற் கைலாசபதி ஸ்மிருதி

(11ம் பக்கம் பார்க்க)

# அமரர் திரு சி.செ. சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் அங்கத்தவரும் சிறந்த சமய சேவையாளருமான சிவனருட் செல்வர் சி. செ. சோமசுந்தரம் அவர்கள் 03.07.2002 ஆம் நாள் சென்னையில் காலமானார் என்ற செய்தி யாழ்ப்பாணச் சைவமக்களுக்கு பெருந்துயரை ஏற்படுத்தியது.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலே 1932 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் ஆறாம் நாட் பிறந்த திரு. சோமசுந்தரம் அவர்கள் யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை ஆகியவற்றின் ஸ்தாபகத் தலைவர்களில் மிக முக்கியமானவராக விளங்கியவரும் திருக்கேதீச்சரத் திருப்பணியில் முதற் தொண்டனாகப் பணிபுரிந்தவருமான சைவச் செம்மல் திரு.சித.மு. பசுபதிச் செட்டியார் அவர்களின் பேரனாராவர்.



தமது ஆரம்பக் கல்வியை யாழ். இந்து ஆரம்ப பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் பெற்றுக் கொண்ட திரு. சோமசுந்தரம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டம் பெற்ற பின் யாழ்ப்பாணம் திரும்பி ஆசிரியப் பணியாற்றினார். ஒரு சில வருடங்கள் வெளி மாவட்டத்தில் பணி புரிந்தார். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் யாழ் இந்துக்கல்லூரியிலே பணியாற்றினார்.

சமயக்கிரியைகளிலும் வழிபாட்டிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த திரு. சோமசுந்தரம் அவர்கள் யாழ். இந்துக்கல்லூரியில் தம் காலத்தில் நடைபெற்ற சமய நிகழ்வுகள் அனைத்தினதும் சிறப்புக்கு மூலகாரணமாகத் திகழந்தார். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கொட்டிலில் குடியிருந்த சிவஞான வைரவப்பெருமானுக்கு அழகானதொரு ஆலயம் அமைத்து 1989 ஆம் ஆண்டிலே மகாகும்பாபிஷேகம் நடைபெற அயராது உழைத்தவர் திரு. சோமசுந்தரம் அவர்களே. அவருடைய சேவையை மதித்த இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் கும்பாபிஷேக தினத்தன்று மாலையில் நடைபெற்றதோர் பெருவிழாவிலே திரு. சோமசுந்தரம் அவர்களுக்கு சிவநெறிச் செல்வர் என்ற பட்டமளித்துப் பாராட்டினர்.

பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணிசெய்து அமரத்துவமடைந்த சரஸ்வதி எனும் நாமம் பூண்ட அம்மையாரை இல்லாளாகப் பெற்ற திரு. சோமசுந்தரம் அவர்களுக்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணுமாக இரு பிள்ளைகள் உள்ளனர். சிறிது காலம் உடல்நலமற்றிருந்த திரு. சோமசுந்தரம் அவர்கள் 02.07.2002 ஆம் திகதி சென்னையில் தமது மகனின் இல்லத்தில் சிதம்பர நடராசப் பெருமான் நினைவுடன் திருவடிப்பேறு பெற்றார்.

அமரர் சோமசுந்தரம் அவர்களது ஆன்மா தில்லைக் கூத்தன் திருவடி நீழலில் இன்புற்றிருக்கப் பிரார்த்திப்போமாக.

# சைவ சமயிகளுக்கான அமாவாசை தர்ப்பணம்

அமாவாசை தினங்கள் உட்பட விதிக்கப்பட்ட தினங்களில் பிதிர்த்தர்ப்பணம் செய்யப்படும். பிதிரர்களை உவப்பிக்கும் பொருட்டு எள்ளும் தண்ணீரும் இறைக்கும் முறையை விபரமாக இந்து சாதனம் புத்தகம் 111 இதழ் 5 (விக்கிரம ஆடிப்பூரணை, 14.08.2000) இல் பிரசுரித்திருந்தோம். இதனை வில்லூன்றி புனித தீர்த்தப் பரிபாலன சபையினர் சைவ சமயிகளுக்கான அமாவாசை தர்ப்பணம் என்ற பெயரில் ஒரு கையடக்க நூலாக 2001ம் ஆண்டு ஆடி அமாவாசை அன்று வெளியிட்டனர். இந்த நூலை தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீனத் திங்கள் இதழாகிய மெய்கண்டார் இவ்வாண்டு சித்திரை மாத இதழில் இருந்து தொடர் கட்டுரையாகப் பிரசுரித்து வருகிறது. இக்கட்டுரைத் தொடருக்கு மெய்கண்டார் இதழாசிரியர் தவத்திரு. புலவர் சுயம்புநாதத் தம்பிரான் அவர்கள் எழுதிய அறிமுகத்தை இங்கு மறு பிரசுரம் செய்கிறோம்.

– ஆசிரியர்

அறிமுகம்:

தமிழ் மரபினர் வழக்கத்தில் இல்லறத்தாரின் கடமைகளாக வள்ளுவர் வகுத்தோதியன பல. அவற்றில் தலையாய கடமைகளாக அவரால் கூறப்பட்டன ஐந்து.

தென் புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல்,
தான் என்று ஆங்கு ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை"

என்பது அவர் திருவாக்கு.

பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்னும் ஐந்து வகையினருக்கும் செய்யும் அறநெறியைத் தவறாமல் செய்துவருதல் இல்லறத்தானுக்கு சிறப்புடைய அறமாகும் என்பது பரிமேலழகரின் பொருள் விளக்கம்.

வள்ளுவரின் கூற்றின் படி தமிழ்ச் சமயச் சார்புடைய இல்லற ஒழுக்கத்தினர் பிதிரர்க்குச் செய்ய வேண்டிய கடமை முதலிடம் பெறுகிறது எனத் தோன்றுகிறது. " .....கெடாமல் ஓம்புதல் தலையான இல்வாழ்க்கை" என்பார் மணக்குடவரும்.

தமிழ்ச் சைவ உலகம் பிதிரரை தென்புலத்தோர் என்றே வழங்கி வருகின்றது. பண்டும் அவ்வாறே வழங்கி வந்துள்ளது என்பதும் வள்ளுவர் வாய்மொழியால் அறிகின்றோம். பிற தமிழ் நூல்களும் செந்தமிழ்ச் சொற்களாலேயே அவரைப் பொருள் விளங்கச் சொல்கின்றன. " தென்புலவாணர்",

(11ம் பக்கம் பார்க்க)

# இந்து சாதனம் கட்டுரைகள் மறுபிரசுரம்

சைவசமயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் இந்துசாதனம் ஆற்றும் பணியைப் பாராட்டி உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பாராட்டுக் கடிதங்களும் கவிதைளும் கிடைக்கின்றன. வாழ்த்தும் நெஞ்சங்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்துசாதனத்தில் வெளிவரும் கட்டுரைகள், ஆசிரியத் தலையங்கங்களை மறுபிரசுரம் செய்ய அனுமதி கோரியும் கடிதங்கள் வருகின்றன. சைவ சமய போதனை, சைவசமயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தல் போன்ற நோக்கங்களுக்காக இந்து சாதனத்தில் பிரசுரமாகும் விடயங்கள் மறுபிரசுரமாவதை நாம் வரவேற்கிறோம்.

இந்து சாதனத்தில் வெளியான சைவசமயிகளுக்கான ஆடி அமவாசை தர்ப்பணம் என்ற கட்டுரையை மறுபிரசுரம் செய்யும் திருவாவடுதுறை ஆதீன வெளியீடான மெய்கண்டார் எனும் திங்கள் இதழின் ஆசிரியர், அக்கட்டுரைத் தொடருக்கு ஓர் அறிமுகம் எழுதியுள்ளார். அவ்வறிமுகத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் இந்துசாதன வாசகர்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்குடன் அதனை இவ்விதழில் மறுபிரசுரம் செய்துள்ளோம்.

பிற பத்திரிகைகளில் மறுபிரசுரமான ஒரு சில இந்துசாதனக் கட்டுரைகள், ஆசிரிய தலையங்கங்கள் பின்வருமாறு:

1. உதயன் நாளிதழில் 11.08.1999 ஆம் திகதிய பதிப்பில் சிரத்தையுடனும் பயபக்தியுடனும் நோற்க வேண்டிய ஆடி அமவாசை என்ற தலைப்பில் இந்துசாதனம் புத்தகம் 110 இதழ் 4 இல் வெளி வந்த கட்டுரை.
2. கனடா வைசித்தாந்த மன்றத்தினர் வெளியிடும் அன்பு நெறி மலர் -06 இதழ் 10 (வைகாசி 2002) மாத இதழில் இந்துசாதனம் புத்தகம் 110 இதழ் 02 இல் வெளியான நமச்சிவாயவே ஞான மெய்ந்நெறி என ஞாலமுய்ய உணர்த்திய ஞானசம்பந்தர் என்ற கட்டுரை.
3. உதயன் நாளிதழ் 26.01.2001 ஆம் திகதிய பதிப்பில் இந்துசாதனம் புத்தகம் 111 இதழ் 10 இல் வெளிவந்த ஆசிரிய தலையங்கம், சாத்வீக குணமும் சர்வ வல்லமையும் பெற்று ஆத்மீக பலத்தோடு அவனி போற்ற வழலாம்–சைவ உணவே சாலச்சிறந்தது என்ற தலைப்பில்.
4. இலங்கை ஸ்ரீசத்யசாயி நிலையங்களின் காலாண்டு வெளியீடான சாயி மார்க்கம் சஞ்சிகையின் மலர் 8, இதழ் 22 (ஜனவரி - மார்ச் 2001) இதழில் இந்துசாதனம் புத்தகம் 111 இதழ் 09 இதழில் வெளி வந்த காகமும் நரியும் என்ற கதை.
5. உதயன் நாளிதழில் 28.05.2002 ஆம் திகதிய பதிப்பில் ஆலயங்களில் மிருகபலியைத் தடை செய்ய ஆக்கபூர்வமான முயற்சிகள் தேவை என்ற தலைப்பில் இந்துசாதனம் புத்தகம் 113 இதழ் 01 இல் வெளியான ஆலயங்களில் மிருகபலி என்ற ஆசிரியத் தலையங்கம்.

உ



திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ 08 உ (24.07.2002)

# முதல் நடவடிக்கை

நல்லூர் நாவலர் மணிமண்டபத்தையும் அது அமைந்துள்ள "அம்மையன்வளவு" என்ற காணியையும் இந்து சமயவிவகார அமைச்சு பொறுப்பேற்றுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந் நடவடிக்கையைச் சைவப் பெருமக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர்.

மாண்புமிகு இந்து சமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன் அவர்கள் மணிமண்டபத்தை உடனடியாகப் புனரமைக்குமாறு பணிப்புரை விடுத்திருப்பதுடன் அதனருகே குருபூசைகள் திருமுறை பாராயணங்கள், புராண படனங்கள், சமயச் சொற்பொழிவுகள் நடத்தக் கூடியதான மடமொன்று அமைப்பதற்கும் நிதி ஒதுக் கீடு செய்துள்ளார். இந்நட வடிக்கைகளுக்காக சைவ சமூகம் அமைச்சருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளது.

நாவலர் மணிமண்டபம் அமைந்துள்ள காணி பற்றிய வரலாற்றை இவ்விதழின் தலைப்புச் செய்தியுடன் சேர்த்துத் தந்துள்ளோம். நாவலர் மணிமண்டபம் அமைந்துள்ள காணியை நாவலர் பெருமான் கொள்முதல் செய்ததன் நோக்கம், கொள்முதல் செய்த உறுதியில் மட்டும்தான் எமக்குச் சொல்லிவைக்கப்பட்டுள்ளது என்றில்லை. அவரது நடவடிக்கையின் வேகத்தின் மூலம் எமக்கு உணர்த்தியும் வைக்கப்பட்டிருக்கிறது.

காணி வாங்கப்பட்ட அதே ஆண்டிலேயே

- மடம் அமைக்கப்பட்டு
- மிகுசைவத் துறைவிளங்க வந்துதித்த திருஞானசம்பந்தர் குருபூசை நடத்தப் பட்டு,

திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த ஓதுவா மூர்த்திகளை அழைத்துவந்து , தாமே சிவவேடப் பொலிவுடன் அடியார் கூட்டத்தலைவனாக விளங்கிப் பக்தி வெள்ளம் கரைபுரண்டோடச் செய்தார். செயல்வீரர் நாவலர்.

இது தமது குறிக்கோளை எது விதத்திலும் அடைய வேண்டும் - நடை முறைப் படுத்தவேண்டும் - என்ற அவருக்கிருந்த வேகத்தை - ஆவலைக் கோடிட்டுக் காட்டுகிறது.

தர்மச் சொத்துக்கள் சட்டத்தின் (Trust ordinance) படி, எந்தவொரு அறக்கட்டளையும், அதன் கர்த்தாவினுடைய நோக்கங்கள், குறிக்கோள்களுக்கமையவே அவ்வறக்கட்டளையை அறங்காவல் செய்யும் பரிபாலகர்களால் உபயோகப்படுத்தப்படல் வேண்டும். நாவலர் பெருமானின் நல்லூர் சைவ மட அறக்கட்டளை தெளிவானதும் இலகுவில் நடைமுறைப் படுத்தக் கூடியதுமான, நோக்கங்களைக் கொண் டது.

அவையாவன:

* சைவசமயாசாரியர், சந்தனாசாரியர், நாயன்மார்களது குருபூசையை நடத்துவித்தல்
* பண்ணோடு தமிழ் பாடும் ஓதுவாமூர்த்திகளை அழைத்து சுவாமி உற்சவம் கொண்டருளும் போது திருமுறை ஓது வித்தல்
* பண்ணோடு திருமுறை ஓதப் பயிற்றுவித்தல்
* சிவபூசை செய்வித்தல்
* சிவபுராண படனங்கள் நடத்துவித்தல்
* சமயப் பிரசங்கங்கள் செய்வித்தல்.

இவற்றை அமுல் நடத்தல் சிரமமான காரியமன்று. இக்காணியில் அமையும் மடத்தில் தினமும் குறிப்பிட்ட நேரங்களில் வந்து திருமுறை ஓத வல்ல நிரந்தரஓதுவார் ஒருவர் நியமிக்கப்பட்டு அவர்களுக்குக் கௌரவமானதொரு வேதனம் வழங்கப்படுதல் வேண்டும்.

மாலை வேளைகளிலும் வாரஇறுதி நாட்களிலும் பண்ணிசை வகுப்புக்கள், திருமுறை வகுப்புக்கள், சைவசித்தாந்த வகுப்புக்கள், புராண படனங்கள், புராணபடன பௌராணிகர்களைப் பயிற்றுவித்தல் ஆகியன நிகழவைக்க வேண்டும். இவற்றை நடத்த தகுதிவாய்ந்த அறிஞர்கள் நியமிக்கப்பட்டு அவர்களது சேவைக்கு சன்மானம் வழங்கப்படுதல் வேண்டும். இவ்வகுப்புக்களில் பங்குபற்றுவோருக்கு தேர்வுகள் நடத்தி சான்றிதழ்கள் வழங்கப்படலாம்.

வெள்ளிக்கிழமை, கார்த்திகை மற்றும் விசேட காலங்களில் சமயச் சொற்பொழிவுகள் நடத்த ஒழுங்கு செய்தல் வேண்டும்.

இங்கு அமையும் சைவ மடாலயத்தில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசைகள், மாணிக்கவாசகர், சந்தனாசாரியர் குருபூசைகள், ஆறுமுகநாவலர் குருபூசை ஆகியன கிரமமாகவும் சிறப்பாகவும் விதிமுறைப்படியும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்படவேண்டும். இவ்வாறான செயற்பாடுகளே நாவலர் இக்காணியைக் கொள்வனவு செய்த குறிக்கோளை நிறைவேற்றும். அவ்வாறு செய்வது மூலம் நாவலர்பெருமானின் நல்லாசிகளைப் பெறுவோம்.

நாவலர் பெருமானின் அவாவை ஓரளவாவது நாம் பூர்த்திசெய்வோமாயின், இம்மடாலயத்தைத் திருமுறையொலியால் - சைவ உண்மைகளையும் சைவ நீதிகளையும் போதிக்கும் செயற்பாடுகளால் - நிறைவிப்போமாயின் அத்திருமுறை ஒலிகேட்டு - அதில் தாமும் பங்குபற்ற வேண்டுமென்ற உளக்கிளர்ச்சியோடு - நாவலர் பெருமான் எழுந்தோடி வந்து மணிமண்டபத்தமர்வார் என்பது திண்ணம்.

இந்துசமய விவகார அமைச்சு இம்மடாலயம் சம்பந்தமாக எடுக்கக் கூடிய முதல் நடவடிக்கை மேற்கண்டவைகளாகவே இருத்தல் வேண்டும் எனத் திடமாக நம்புகிறோம்.

# நாவலர் மணிமண்டபம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ளைக்கொண்டு மடம் ஒன்று அமைக்கப்பட்டு, அம்மடத்தில் 1874 ஆம் ஆண்டு வைகாசி மாதம் இருபதாம் நாள் திங்கட்கிழமை வைகாசி மூல தினத்தன்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை சிறப்பாக நடத்தப்பட்டது. அன்றிரவு நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வசந்த மண்டபத்திலே, "தோடுடைய செவியன்" எனத் தொடங்கும் திருஞானசம்பந்தர் தேவாரத்தையே பீடிகையாகக் கொண்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் பிரசங்கமும் நடைபெற்றது. இவ்வாறு நாவலர் பெருமானால் நல்லூரில் அமைக்கப்பட்ட மடம் தெற்கு வீதி மடம் என அழைக்கப்படலாயிற்று.

1874 ஆம் ஆண்டு நல்லூர்க் கந்தசுவாமி கோவில் ஆவணி மகோற்சவத்தின் போது, நாவலர் பெருமான், திருவாவடுதுறை ஆதீனத்து ஓதுவாமூர்த்திகள் சிலரை அழைப்பித்து சுவாமி உற்சவம் கொண்டருளும் போது திருமுறை ஓதுவித்த சிறப்பை, ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம் என்ற நூலில் அதன் ஆசிரியர் வே. கனகரத்தின உபாத்தியாயர் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"கந்தசுவாமி கோவிற் திருவிழாச் சமீபித்தபடியால், தேவாரத் திருக்கூட்டச் சிறப்பையும், தேவாரம் முதலியவை திருவிழாக் காலத்திலே சுவாமிக்குப் பின்னாக ஓதுவதாற் சனங்களுக்கு உண்டாகும் கடவுட் பக்தியையும் இவ்வியாழ்ப்பாணத்துச் சனங்களுக்குக் காட்ட நினைந்து, திருவாவடுதுறையினின்றும் ஓதுவார் சிலரை அழைப்பித்து, திருவிழாக் காலத்திலே அவர்களுக்கும் இங்குள்ள மற்றைச் சைவர்களுக்கும் தெற்கு வீதி மடத்திலே புண்ணியவான்கள் சிலரைக் கொண்டு மாகேசுரபூசை செய்வித்து, சுவாமி வீதியிலே உற்சவம் கொண்டருளும் பொழுது சுவாமிக்குப் பின்னாக அவர்களைக் கொண்டு தேவாரம் ஓதுவித்துக்கொண்டு வந்தார்."

"இவர்கள் தமிழ் வேதமாகிய தேவாரத்தை ஓத, அதனைக்கண்ட பிராமணர் தாங்களும் வந்து சுவாமிக்குப் பின்னாக வேதம் ஓதுவாராயினார்கள். அவரும் (நாவலரும்) விபூதி உத்தூளனஞ் செய்து, திரிபுண்டரந் தரித்துத் தலையிலே சிரமாலையும் கழுத்திலே கண்டிகையும் கையிலே பௌத்திரமும் தரித்து, யாவருக்கும் பத்தியை விளைவிக்கத் தக்க சிவவேடப் பொலிவோடு திருக்கூட்டத்தலைவராய் நின்றார். அத் திருக்கூட்டத்தின் சிறப்பை என்னென்று சொல்வோம்' எதற்கொப்பிடுவோம்'' ஆதியிலே சுப்பிரமணியப் பெருமானின் அவதாரமாய் விளங்கிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பதினாறாயிரம் திருக்கூட்டத்தோடு தோற்றிய சிறப்புக் கொப்பிடலாம்".

இவ்வாறு இச்சைவ மடத்தை நிலைக்களனாகக் கொண்டு நடந்த பணி அந்நூலில் விபரிக்கப்பட்டுள்ளது.

நாவலர்பெருமானின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து, கோவில் திருவிழாவின் கிராம சாந்தியின் போதும் தேர்த்திருவிழாவின் போதும் வைரவ பூசையின் போதும் அதுவரை காலமும் நடைபெற்று வந்த மிருகபலியை நிறுத்தக் கோவிலார் சம்மதித்ததன் பேரிலேயே நாவலர் பெருமான் பலகால இடைவெளிக்குப்பின் 1873, 1874 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மகோற்சவங்களில் பங்குபற்றி மேல்விபரித்தவாறான பக்திச் சூழலை ஏற்படுத்தினார். ஆனால் தூரதிட்டவசமாக, 1874 ஆம் ஆண்டு மகோற்சவத்தின் போது, இரதோற்சவத்திற்கு முதற் தினமான சப்பரத்திருநாளன்று தேர் முட்டுப் பறிக்கும் போது, துட்டர் சிலருடைய சொல்லைக் கேட்டு, கோவிலார் மிருகபலி செய்தார்கள். இது நாவலரது மனச்சாட்சிக்கும் கட்டுப்பாட்டுக்கும் சுப்பிரமணியப் பெருமானுக்குப் பூசையுற்சவம் முதலியன விதிக்கும் குமாரதந்திரத்திற்கும் விரோதமாதலால், அன்று தொடக்கம் நாவலர் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் செல்வதை நிறுத்திக்கொண்டார். அதன் பின் 1879 இல் சிவபதமடையும் வரை நாவலர் இக்கோவிலுக்குச் செல்லவேயில்லை. (காலவோட்டத்தில் பலியிடும் வழக்கம் கைவிடப்பட்டு விட்டது).

நாவலரின் பின், அவரது அறக்கட்டளைகள் அவரது முதன் மாணவன் சதாசிவம்பிள்ளை அவர்களால் பரிபாலிக்கப்பட்டன. சதாசிவம்பிள்ளைக்குப் பின், சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை அறக்கட்டளைக்கு வித்துவ சிரோமணி ச. பொன்னம்பலபிள்ளை அவர்களும் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலைக்கும் நல்லூர் சைவ மடாலயத்திற்கும் திரு.தம்பு கைலாசபிள்ளை அவர்களும் அறங்காவலர்களாக விளங்கினர். யாழ்ப்பாணத்து இரு அறக்கட்டளைகளுக்கும் திரு.த கைலாயபிள்ளையின் பின் திரு. முத்தையா சோமசுந்தரம் அவர்களும் அவர்பின் திருமதி செல்லம்மா சோமசுந்தரம் அவர்களும் அவர்பின் விசுவநாதர் முத்துக்குமாரு என்பவரும் அறங்காவலர்களாகப் பணியாற்றினர். இவர்கள் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையை நிருவகித்ததுடன் நல்லூர் சைவ மடத்தில் அறுபத்து மூவர் குருபூசை, வேதாகமம், திருமுறை வகுப்பு ஆகியவற்றை நடத்தி வந்தனர். 1961 ஆம் ஆண்டில் அப்போதைய அரசாங்கம் பாடசாலைகளைத் தேசியமயமாக்கிய போது, வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையும் அரசிடம் பராதீனப்படுத்தப்பட்டது. இவ்வித்தியாசாலைப் பராமரிப்புக்காகவும் உபயோகத்துக்காகவும் வாங்கிவிடப்பட்ட வீடு, வயல்கள், வியாபார நிலையங்கள் ஆகியவற்றுடன் சேர்த்து நல்லூர் சைவ மடம் அமைந்திருந்த ஐந்து இலாச்சம் 12 குழி பரப்புள்ள "அம்மையன் வளவு" என்ற காணியும் (தவறுதலாக) அரசிடம் பராதீனப்படுத்தப்பட்டது.

இவ்வாறு பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டதன் விளைவாக அரசுடைமையான நாவலர் சொத்துக்களைப் பராமரிக்க அச்சமயம் வடமாநிலக் கல்விப் பணிப்பாளராக விருந்த திரு. சிவ. உ. சோமசேகரம் அவர்கள் ஐவர் கொண்ட தர்மகர்த்தா சபையொன்றை ஏற்படுத்தச் சிபார்சு செய்தார். இதனை ஏற்றுக்கொண்ட அப்போதைய கல்விமா அதிபதி திரு. குலதுங்கா அவர்கள் பின்வருபவர்களை உறுப்பினராகக் கொண்ட தர்மகர்த்தா சபையை நிறுவினார்.

1. திரு.சிவ.உ.சோமசேகரம் (வடபிராந்திய கல்விப்பணிப்பாளர், பதவிவழித் தலைவர்)

(10ம் பக்கம் பார்க்க)

# நாவலர் மணிமண்டபம்

பக்கத் தொடர்ச்சி)

2. வித்துவான் இ. திருநாவுக்கரசு (வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை(நாவலர் மகா வித்தியாலயம்) அதிபர், பதவி வழிச்செயலாளர்)
3. சிவஸ்ரீ.ச.குமாரசுவாமிக் குருக்கள் (பழைய மாணவர்) உறுப்பினர்
4. பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை (பழைய மாணவர்) உறுப்பினர்
5. திரு.ச. பொன்னுஸ்வாமி (சிதம்பரம் நாவலர் அறக்கட்டளைத்தர்ம பரிபாலகர்கள் சார்பில்) உறுப்பினர்.

1962 ஆம் ஆண்டில் இத் தர்மகர்த்தாசபை நிறுவப்பட்டது. நாவலர் தர்மங்கள் எந்த நோக்கத்திற்காக நிறுவப்பட்டனவோ அந்த நோக்கங்களை நிறைவேற்றும் அதிகாரம் இத்தர்மகர்த்தாசபையினருக்கு வழங்கப்பட்டது.

இத்தர்மகர்த்தா சபையினரே இன்றும் நல்லூர் சைவமடம் (அம்மையன் வளவு) தவிர்ந்த ஏனைய நாவலர் சொத்துக் களைப் பரிபாலித்து வருகின்றனர். நாவலர் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருவாயைச் சைவ சமயக்கல்வி வளர்ச்சிக்குச் செலவிட்டு வருகின்றனர்.

நல்லூர் சைவமடம் அமைந்திருந்த (அம்மையன் வளவு) காணியை 1968 ஆம் ஆண்டு யூன் 17ஆம் திகதி உதயமான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை என்ற அமைப்பு நாவலர் தர்மகர்த்தா சபையின் அனுசரணையுடனும் கல்விமா அதிபதியினுடைய ஒப்புதலுடனும் பெற்று அங்கு நாவலர் மணிமண்டபமொன்றை அமைத்து, நாவலர் பெருமான் திருவுருவச்சிலையொன்றை கொழும்பிலிருந்து ஊர்வலமாகக் கொண்டு வந்து யாழ்ப்பாணத்தில் பெருவிழா நடத்தி நல்லூர் நாவலர் மண்டபத்தில் 29.06.1969ஆம் திகதி நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் சிலையை நிறுவியது.

ஈழத்துச் சைவத்தமிழ் மக்களைத்தலைநிமிர்ந்து வாழ வழி வகுத்த சைவத்தின் சீர்திருத்தச் செம்மலாம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் மேல் அம்மக்கள் கொண்டிருக்கும் எல்லையில் பக்தியின் வெளிப்பாடாகவும் நன்றியின் சின்னமாகவும் பதினாறு ஆண்டுகள் மணிமண்டபத்தில் கொலுவீற்றிருந்த நாவலர் திருவுருவச்சிலை, ஒரு சில நயவஞ்சகர்களின் சூழ்ச்சியால், 17.08.1985 ஆம் திகதி பிற்பகல் ஆறு மணிபோல் மணிமண்டபத்திலிருந்து அகற்றப்பட்டு எதுவித புனிதமும் அலங்காரமும் அற்றநிலையில் எடுத்துச்செல்லப்பட்டது. சைவ உலகம் கொதித்தெழுந்தது. இவ் வீனச் செயல்களைக் கண்டிக்காதவர்கள் இல்லை. தனிப்பட்டவர்களும் ஸ்தாபனங்களும் இவ்வீனச் செயல்களைக் கடுமையாகக் கண்டனஞ் செய்து அறிக்கை வெளியிட்டார்கள். ஆயினும் அப்போதிருந்த இயல்பு நிலை அற்ற சூழ்நிலை காரணமாக எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாதிருந்தது. ஆனால் கபடமான வழியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து நாடகமாடியவர்களின் மதிகெட்ட செயலால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையே இன்று இல்லாததாகிவிட்டது.

இயல்புநிலை மெதுவாகத் திரும்பிக்கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், கைவிடப்பட்ட நிலையிற் காட்சியளித்த மணிமண்டபத்தையும் அது அமைந்த காணியையும் இந்து சமயவிவகார அமைச்சு பொறுப்பேற்றிருப்பது வரவேற்கத்தக்கதொரு நிகழ்வாகும். நாவலர் பெருமான் இக்காணியைக் கொள்வனவு செய்த நன்நோக்கங்களுக்காக அதனை உபயோகப்படுத்துவதே அமைச்சு இக்காணி சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய முதல் நடிவடிக்கை எனச் சைவப்பெருமக்கள் கருதுகின்றனர். *

# வவுனியாவில் "இந்து அன்பகம்"

ஸ்ரீலஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகளின் "இந்து அன்பகம்" எனும் குழந்தைகள் காப்பகத்தின் கட்டடத்திறப்புவிழா 14.07.2002 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இரண்டாம் கட்டை, வேப்பங்குளம், வவுனியா (தொலைபேசி 024-23683) என்ற முகவரியில் நடைபெறவுள்ளது.

ஐம்பதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற குழந்தைகளைத் தற்போது கொண்டுள்ள இவ்வன்பகம் ஸ்ரீலஸ்ரீ சிவசுப்பிரமணிய ஸ்வாமிகள் என்பவரால் 1997ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அச்சமயம் ஆரம்பிக்கப்பட்ட கட்டட வேலைகள், சுவாமியவர்கள் 2000ஆம் ஆண்டில் சமாதியடைந்ததால் தொடரப்படாதிருந்தது. சுவாமியின் இரு சீடர்கள் அன்பகத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தனர்.

கொழும்பு பட்டக்கண்ணு நிறுவன முகாமையாளரும் சிறந்த சமூகசேவையாளருமாகிய ஒருவரின் முயற்சியால் கட்டடவேலைகள் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு சகல வசதிகளையும் கொண்டதோர் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. வேறுசில நலன் விரும்பிகளும் உதவிசெய்துள்ளனர். சமையற்கூடம், உணவருந்தும் மண்டபம் ஆகியவற்றை வேறாகக்கொண்டுள்ள இப்புதியகட்டடம், நூறு குழந்தைகளை அரவணைக்கக் கூடியது.

இக் காப்பகத்தருகே கோவிலொன்றும் அமைந்துள்ளது. இவ்வாலயப் பணிகளையும் காப்பகத்தின் தேவைகளையும் அதன் பிரதம பாதுகாவலரான செல்வி ஜெயராணி அவர்களும் அவரது உதவியாளரான செல்வி ஓம் நமசிவாயேஸ்வரி அவர்களும் கவனித்து வருகிறார்கள்.

திருகோணமலையில் அமைந்துள்ள அன்பு இல்லத்தின் நிறுவனராகிய திரு.சுந்தரலிங்கம் அவர்கள் தமது அனுபவமிக்க சீடர்கள் சிலரை வவுனியா அன்பகத்திற்கு உதவிக்காக அனுப்பி வைத்துள்ளதாகவும் அறிகிறோம்.

கட்டடத் திறப்புவிழா நிகழ்வில் வவுனியா இந்து அன்பகக் குழந்தைகளுடன் திருகோணமலை அன்பு இல்லத்துக் குழந்தைகளும் கலந்து கொள்ளவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டடத்திற்கான அடிக்கல் அன்பகத்தைச் சேர்ந்த குழந்தை யொன்றினாலேயே நாட்டப்பட்டது. அக்குழந்தையாலேயே அக்கட்டடம் திறந்து வைக்கப்படவுமுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அன்பகத்தைப் பராமரிக்க கருணையுள்ளம் கொண்டவர்களது நன்கொடைகள் பேருதவியாயமையும்.

# சித்தாந்தப் பேரறிஞர் ..............

(6ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற பெயரில் அவர் எழுதிய நூல் 1998 இல் வெளிவந்தது.

1994ஆம் ஆண்டு யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்று சைவ சித்தாந்த விளக்க விருத்தியில் யாழ்ப்பாண அறிவியல் மேதையின் சுவடுகள் என்னும் பொருள் பற்றித் திருவாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை ஆற்றினார்.

1998ஆம் ஆண்டு நடை பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் கௌரவ இலக்கிய கலாநிதிப் (Doctor of Letters) பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டார்.

திருத்தொண்டர் புராணத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்ட பண்டித ரையா அவர்கள், அப்புராணத்தில் அரியவும் பெரியவுமாகக் கண்டவ ற்றைக் கட்டுரைகளாக்கி அரியவும் பெரியவும் என்னும் தலைப்பில் மூன்று தொகுதிகளாக்கித் தந்தார் கள்.

ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலய பவள விழாவில் சைவப் பெரியார் ஞானப்பிரகாசம் அவர்கள் பண்டிதரையாவுக்கு சைவ சித்தாந் தப் பேரறிஞர் பட்டம் வழங்கிக் கௌரவித்தார்.

1998ஆம் ஆண்டு நடை பெற்ற ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத் தமிழ் விழாவில் பண்டிதமணி என்ற பட்ட மும் 1999இல் ஏழாலை மக்களால் நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் மகாமகோபாத்தியாயர் என்ற கௌரவ விருதும் வழங்கிச் சிறப்பிக் கப்பட்டார்.

பண்டிதரையாவின் சித்தாந் தச் செழும்புதையல், சித்தாந்த விளக்கில் சைவக்கிரியைகள் என்ற இரு நூல்களும் இந்துசமய கலாசார அமைச்சின் பரிசைப் பெற்றன. நாவலர் பிள்ளைத்தமிழ், சிவஞான சித்தித் திறவுகோல் ஆகிய இரு நூல் களும் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றன. திருக்கேதீச்சர மான்மியம் - புராதன காண்டம் வடகிழக்கு மாகாண சபையின் சாகித்தியப் பரிசைப் பெற்றது.

திருக்கேதீச்சர மான்மியம் - பொற் பொளிர் காண்டம் இலக்கிய கலாநிதி பண்டிதமணி நினைவுப் பரிசும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்தநாள் நிதியப் பரிசும் பெற்றன.

சைவ சித்தாந்தத்தை வளர் த்துவரும் தமிழகச் சைவ மடங்களும் ஆதீனங்களும் பண்டிதரையாவின் சைவசித்தாந்த அறிவைப் போற்றின.

1985 - 87ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் நாவலர் பணிமன் றம் அமைத்து நாவலர் குரல் என்ற பத்திரிகை வெளிவர முன்னின்று ழைத்தார். தனது இறுதிக்காலத்தில் சைவ சமயத்தவரிடையே சைவத்துக் கொவ்வாத வழிபாட்டு முறைகள் ஊடுருவுவதைக் கண்டு மனம் மிக வெதும்பிய பண்டிதர் அவர்கள், கொதித்தெழுந்து அவற்றை மூர்க்க மாகக் கண்டித்தார். அவர் எழுதிய இக் கண்டனக் கட்டுரைகள் "சைவத் தமிழ் அறிவியல், பண்பாட்டு இயக்கம்" என்ற பெயரில் வெளிவந்தன.

தனது இறுதி மூச்சுவரை சைவ சமயத்தைப் புறச்சமய ஊடுருவல்களிலிருந்து காப்பாற்ற வேண்டுமென அவரது உள்ளம் துடித்துக் கொண்டிருந்ததைப் பண்டிதரையாவுடன் நெருங்கிப் பழகியோர் நன்கறிவர். சைவ வழிபாட்டிலும் கிரியைகளிலும் அதற்கொவ்வாத ஊடுருவல்கள் ஏற்படாது தவிர்க்கக் கூடிய வகையில் சைவ மக்களிடையே சைவ சமயம் பற்றிய அறிவூட்டி அறிவியல் விளக்கமுடன் பிரசாரம் செய்து சைவ சமயத்தினதும் சைவ சித்தாந்தத்தினதும் தனித்துவமான பெருமையை சிதைய விடாது வளர்க்கப் பாடுபடுவதே பண்டிதரை யாவுக்கு நாம் செய்யக்கூடிய கைமா றாகும்.

ஓம் சாந்தி' ஓம் சாந்தி'' ஓம்சாந்தி'''

## நல்லைப் பெருவிழா

| | | | | |
|---|---|---|---|---|
| ஆடி | 28 | (13.08.2002) | செவ்வாய் | கொடியேற்றம் |
| ஆவணி | 06 | (22.08.2002) | வியாழன் | மஞ்சம் |
| | 14. | (30.08.2002) | வெள்ளி | கார்த்திகை உற்சவம் |
| | 16. | (01.09.2002) | ஞாயிறு | சந்தானகோபாலர் உற்வசம் மாலை கைலாசவாகனம் |
| | 17. | (02.09.2002) | திங்கள் | கஜவல்லி ,மஹாவல்லி உற்சவம் வேல்விமானம் |
| | 18. | (03.09.2002) | செவ்வாய் | தெண்டாயுதபாணி உற்சவம் |
| | 19. | (04.09.2002) | புதன் | சப்பரம் |
| | 20 | (05.09.2002) | வியாழன் | தேர் |
| | 21. | (06.09.2002) | வெள்ளி | தீர்த்தம் |
| | 22. | (07.09.2002) | சனி | பூங்காவனம் |
| | 23. | (08.09.2002) | ஞாயிறு | வைரவர் உற்சவம். |

# சைவப் பெரியார்........

(2ம்பக்கத் தொடர்ச்சி)
கேட்டுக்கொண்டார். ஆனால் பெரியார் அவர்கள் இலங்கையில் செய்யவேண்டிய சைவத் தொண்டுகள் பல இருந்தபடியால் அதற்கு உடன்படவில்லை.

**இறுதிநாட்கள்:**

1953ஆம் ஆண்டிலே Glories of Saivaism (சைவத்தின் மேன்மை) என்ற ஆங்கில நூலை எழுதி அச்சுப் பிழை திருத்தம் செய்து கொண்டிருக்கையில் பெரியாரைப் பற்றிய நோய் தீவிரமடைந்தது. ஆகஸ்ட் மாதம் பதினான்காம் நாள் (14.08.1953) ஆடி மாதத்து அத்தப் பெருநாளன்று ஆடவல்லானின் அடியிணையை அடைந்தார். இறுதி நாட்களில் அவரது உடல் தோலும் எலும்புமாகவே அமைந்து காட்சிதந்த போதிலும் அவரது மூளையின் சிந்தனைத் தெளிவு மிகச்சிறிதளவுதானும் பாதிக்கப்படவில்லை என்பது அசாதாரணமானதும் வியப்புக்குரியதுமாகும். மரணத்தைத்தழுவிய தினத்தன்று காலையில் கூட அவர் "சைவத்தின் மகிமை" என்ற தமது இறுதி ஆங்கில நூலிற்கு இறுதி வடிவம் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். முதனாளிரவு நோயினால் அவஸ்தைப்பட்ட போது அவர் பக்கத்தே விழித்து நின்று பணிவிடை செய்தவர் திரு.கதிரவேலு என்பவராவர்.

14.08.1953 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் அவரது ஆவி பிரிந்தது. அச்சமயம் அவரது மனைவி திலகவதி, பொலிகண்டியைச் சேர்ந்த பழைய மாணவன் வி. நடராசா (முன்னாள் அதிபர், சிதம்பராக் கல்லூரி, வல்வெட்டித் துறை), திரு. கதிரவேலு ஆகியோர் அருகிருந்தனர். திலகவதி அம்மையார் திரு. நடராசாவைப் பார்த்து, "மாஸ்ரர் நெற்றியில் விபூதியை நிறையப்பூசி ஸ்ரீ பஞ்சாட்சரத்தை வலக்காதில் மூன்றுமுறை ஓதுங்கள்" என்றார். திரு. நடராசா அவர்கள் திருப்பெருந்துறையில் இருந்து கொணரப்பட்ட விபூதியை நெற்றியில் நிறையப் பூசி வலக்காதில் மூன்று முறை திருவைந்தெழுத்தை ஓதினார். பத்து நிமிடங்களில் ஆவி பிரிந்தது.

இங்கு தன்னை மணந்தும், அவர் விருப்பப்படி, பிரமச்சரிய பண்பை இறுதி நிலையிலும் தனக்கும் அவருக்குமாகக் காத்து நின்ற அம்மாதரசியின் பண்பு வியக்க வைக்கிறது. அப்பர் பெருமானின் சகோதரி திலகவதியார், திருநீலகண்டநாய னாரும் அவர் தம் துணைவியாரும், இராமகிருஷ்ண பரமகம்சரும் சாரதா தேவி அம்மையாரும் ஆகியோர்கள் வாழ்வை நினைவுக்குக் கொண்டு வருகின்றது.

சைவப் பெரியாரின் பூதவுடலுக்கான இறுதிச் சடங்குகள் மறுநாள் அமைதியாகவும் அழகாகவும் நடைபெற்றது. அப்போது திலகவதி அம்மையார், பெரியாரின் பாதங்களில் பூச் சொரிந்து

> போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
> போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
> போற்றியோ நமச்சிவாய புறமெனைப் போக்கக் கண்டாய்
> போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி"

எனப்பாடி அழுத காட்சி கருங்கல் மனதையும் கரைந்துருகச் செய்தது.

இறுதிக்கிரியைகள் அவரது மருமகன் திரு. அருணாசலம் அவர்களால் நிறைவேற்றப்பட்டது. வலிகாமம் மேற்கைச் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் சிவார்ப்பண நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

**பெரியாரின் பேரவா: அது நிறைவேற வேண்டும்**

சைவப் பெரியாரின் பேரவா என்ன என்பதை சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்தவரும் சைவப் பெரியாரின் மாணவனுமாகிய பண்டிதர் க. வேலுப்பிள்ளை, B.A. அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்:

"சைவ சமயத்தைச் சீருறச் செய்ய ஒரு மகாசபையும், ஒரு அதிகார சபையும் இயங்க வேண்டும். கிளைச் சபைகள் பல பாகங்களிலும் இருக்க வேண்டும். கிளைச் சபைகளின் பிரதிநிதிகளால் அதிகாரசபை ஆக்கப்படும். இச் சபைகளில் அங்கத்தவர்களாகச் சேருபவர்கள் முதலிடம் சமயத்துக்குக் கொடுப்பவர்களாதல் வேண்டும். புறச் சமயத்து நண்பர் கருத்துக்காக நின்று எமது சமயத்தை இடர்பட விடுவோர் எமது சபைக்கு அருகர் அல்லர். எந்த உலக நயத்திலும் பார்க்க சமயச் சீர் மேலானதென்று எண்ணுவோரே எமது சபைக்கு அங்கத்தவராகத் தக்கவர். அடிக்கிற காற்றுக்கெல்லாம் திரும்புவோர் எங்களுக்கு வேண்டியவரல்லர். சமாதான காலத்திலே சேனையிலே சேர்ந்திருந்து போர் வருகின்ற காலத்திலே சேனையில் நின்றும் விலகுபவன் சேனையிலே சேரத்தக்கவனல்லன். போர் வந்த காலத்திலே அகமலர்ந்து இரத்தம் சிந்தப் போர் செய்யத் தக்கவனல்லோ சேனையிலே சேர்ப்பிக்கப்பட வேண்டியவன். தொகை எங்களுக்குத் தேவையில்லை. மன உறுதிப்பாடு தான் தேவை. எங்களுடைய சபையின் நோக்கம் மூன்று:

1. கோவில்களிலுள்ள கேடுகளைக் களைதல்.
2. எங்களுடைய சமயத்தைப் புறப்பகையினின்றும் காத்தல்.
3. சைவசமய அடிப்படை உண்மைகளைப் பரப்புதல்"

இச்சபையை ஆக்கி இயக்கி வலுப்படுத்துமுன் எங்கள் சைவப் பெரியார் மறைந்து விட்டார். இம்மூன்று நோக்கங்களில் இறுதி இரண்டு நோக்கங்களில் கூறப்பட்ட விரண்டும் மிகவும் சீர்கெட்ட வழியில் செல்கிறது. மாணவர்களிடையே சமய உணர்வை ஊட்டக் கூடிய ஆசிரியர்களைக் காண்பது முயற்கொம்பாகிவிட்டது. பாடசாலைகளில் சமய போதனை பரீட்சைப் பெறுபேற்றை நோக்கமாகக் கொண்டதாக மாறிவிட்டது. சமய உணர்வூட்டல், சமய சாதனை, சமய ஒழுக்கக்கல்வி ஆகியன அற்ற சமய பாடபோதனையே இன்று பாடசாலைகளில் நடைபெறுகிறது.

இந்நிலை மாறச் சைவப் பெரியார் அவாவினது போன்றதொரு சமயத் தலைமையை உருவாக்கி, இயக்கி அதன் மூலம் சமய உணர்வு, சமய அறிவு, சமய ஆர்வம் பெருக நம் இளஞ் சந்ததியினருக்குப் பயிற்சி அளிப்பதும் சாதாரண மக்களும் சைவசமய அடிப்படை உண்மைகளை உணரக் கூடியதாகப் பணியாற்றக் கூடிய சைவப் பிரசாரகர்களை உருவாக்குவதும் இச்சபையின் குறிக்கோளாக அமைதல் வேண்டும்.

(முற்றும்)

# சைவபரிபாலன சபை - யாழ்ப்பாணம்
## சைவசித்தாந்த பிரவேச/ பால /பண்டிதர் தேர்வுகள் - 2002
## சித்தி பெற்றோர் விபரம்

*சைவசித்தாந்த பிரவேச பண்டிதர்:*

*மூன்றாம் பிரிவு:*
1. செல்வி சிவவதனி சுப்பிரமணியம் (சுன்னாகம் )
2. செல்வி சசிலேகா கனகசுந்தரம்பிள்ளை (அச்சுவேலி)
3. செல்வி.சிவரஞ்சினி தி. (நல்லூர்)

*சைவ சித்தாந்த பாலபண்டிதர்:*

*இரண்டாம் பிரிவு*
1. திரு. ஆறுமுகம் சிவகுமார் (பண்டத்தரிப்பு)
2. செல்வி பார்மதி குமாரசுவாமி (கந்தரோடை)
3. செல்வி உஷா ஜினி பேரானந்தம் (அல்வாய்)

*மூன்றாம் பிரிவு*
1. செல்வி சங்கீதா சதாசிவசர்மா (நீர்வேலி)
2. செல்வி வா. சாந்தினி (சுழிபுரம்.)

*வ. கந்தசாமி*
*தேர்வுச்செயலாளர்.*

*சைவசித்தாந்த பண்டிதர்*

*இரண்டாம் பிரிவு:*
1. செல்வி - குவேனி கந்தசாமி (யாழ்ப்பாணம்)
2. திருமதி குகதாஸ் -மகாலக்சுமி (மல்லாகம்)
3. திரு. சிவானந்தன் நந்தகுமார் (உரும்பிராய்)
4. திரு. பிரம்மஸ்ரீ குமாரசாமிசர்மா சிவராஜசர்மா (திருநெல்வேலி)

*மூன்றாம் பிரிவு*

1. திரு. வேலாயுதர் ஜெயகுரு (சுழிபுரம்)
2. திரு.அப்பாத்துரை கருணாகரன் ( சுழிபுரம்)
3. செல்வி மனோரஞ்சினி சுப்பிரமணியம் (வட்டுக்கோட்டை)

*ஞானசித்தி (இலக்கணபாடம்)*
1. திரு. கு. செந்தில் குமரன் (கோண்டாவில்)
2. செல்வி புஸ்பறேகா சுந்தரலிங்கம் (நீர்வேலி)

## நல்லூரான் கிருபை வேண்டும்

இராகம்: கருட்டி தாளம்: ஆதி

பல்லவி

நல்லூரான் கிருபை வேண்டும் - நாம் எந்நாளும்
பாடவேண்டும் - வேறென்ன வேண்டும்

அநுபல்லவி

சொல்லும் பொருளுமற்றுச் - சும்மா விருக்கவேண்டும்
தூய குருவின்பாதம் துணையாகக் கொள்ளவேண்டும்
(நல்லூ)

சரணங்கள்

அல்லும் பகலுஞ்சிவ நாமத்தைச் சொல்லவேண்டும்
ஆசை மூன்றையும் அடியோடு கொல்லவேண்டும்
கண்டு கண்டுமனங் குளிர்ந்திட வேண்டும்
காமக் குரோத மோகத்தைத் தீர்க்கவேண்டும்.
(நல்லூ) 1

பொறிவழி போய்மனம் அலையாமை வேண்டும்
பூரண மான நிட்டையும் வேண்டும்
எல்லா ரிடத்துமன்பு செலுத்தவேண்டும்
எழில்பெறுஞ் சுழுமுனை வழிச்செல்ல வேண்டும்.
(நல்லூ) 2

- நற்சிந்தனை

## சைவசமய பாடக் கருத்தரங்கு

பாடசாலைகளில் பத்தாம், பதினொராம் தரங்களில் சைவசமயபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சைவ சமய பாடக் கருத்தரங்கொன்றை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் தேர்வுப் பகுதியினர் ஒழுங்கு செய்துள்ளனர். இக்கருத்தரங்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆகஸ்ட் 18,19ஆம் திகதிகளில் நடைபெறும். கருத்தரங்கின் முதலாம் நாள் நிகழ்வை யாழ் பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயரும் இரண்டாம் நாள் நிகழ்வை யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் அவர்களும் தொடக்கி வைப்பர். இக்கருத்தரங்கில் சைவப்புலவர் திரு.மு. திருஞானசம்பந்தபிள்ளை, சைவப்புலவர் திரு. செல்லையா திருநாவுக்கரசு, சைவப்புலவர் திரு.சு. செல்லத்துரை, திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவ. மகாலிங்கம் ஆகியோர் மூல வள ஆளணியினராகப் பங்கு பற்றவிருக்கிறார்கள். இரு நாட்கருத்தரங்கிலும் பங்குபற்றியவர்களுக்கு தீவகக் கல்விப்பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன் அவர்கள் இரண்டாம் நாட்கருத்தரங்கின் இறுதியில் சான்றிதழ் வழங்குவார்கள்.

இக்கருத்தரங்கின் இணைப்பாளராகச் சைவ பரிபாலனசபையின் தேர்வுச் செயலர் சைவப் புலவர் வ. கந்தசாமி அவர்கள் பணியாற்று கிறார்கள்.

## அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் 2002 ஏப்ரல் மாதம் நடத்திய இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகளில் சித்திபெற்றோர் விபரம்:

இளம்சைவப்புலவர்:
2ஆம் பிரிவு

1. திரு. பாலசுப்பிரமணியம் பத்மநாதன் (ஏழாலை)
2. செல்வி உஷாஜினி. பேரானந்தன் (அல்வாய்)
3. செல்வி ரேவதி பரமானந்தன் (ஆனைக்கோட்டை)
4. செல்வி துளசிமலர் வைத்தி (சாவகச்சேரி)

3ஆம் பிரிவு

1. செல்வி சாந்தினி வாமதேவன் (சுழிபுரம்)
2. திருமதி. ஜெயரட்ணராசா சிவக்கொழுந்து (சுழிபுரம்)
3. செல்வி . பேபிவதனா தில்லையம்பலம் (சுழிபுரம்)
4. செல்வி சங்கீதா சதாசிவசர்மா (நீர்வேலி)
5. செல்வி பார்மதி குமாரசாமி (சுன்னாகம்)
6. செல்வி த. சிவசக்தி (கோப்பாய்)
7. திருமதி. தேவதாசன் வனிதராணி (நெடுந்தீவு)

சைவப்புலவர்
2ஆம் பிரிவு

1. திரு சண்முகலிங்கம் முகுந்தன் (இணுவில்)
2. திரு. மயில்வாகனம் சிவலிங்கம் (கோண்டாவில்)
3. திரு. லிங்கநாயகம் ரமணன் (நெடுந்தீவு)
4. திரு. சிவகுருநாதர் சிவசுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்)
5. திரு. குலசிங்கம் றஜீபன் (சுன்னாகம்)

3ஆம் பிரிவு

1. திரு. கிட்டினர் சிவமணி (யாழ்ப்பாணம்)
2. செல்வி சுபாஜினி தம்பிராசா (யாழ்ப்பாணம்)

வ. கந்தசுவாமி
தேர்வுச்செயலாளர்.

## அமாவாசைத் தர்ப்பணம்.............

(7ம் பக்கத் தொடர்ச்சி)

"தென்னாடர்" எனவும் திருவிளை யாடற்புராணம் கூறும்.

"அவர்க்கு இடம் தென்திசை ஆதலின் தென்புலத்தார்" என்று அப் பெயர்ப்பொருளை விளக்குவார் பரிமேலழகர். இத் தென்புலத்தாரைப் பலர் தம் குடும்பத்தில் இறந்தார் எனவே கருதி வருகின்றனர். அது உண்மையன்று. தென்புலத்தார் என்பார் கடவுளரில் ஒரு வகையினர் ஆவர். பிதிரர் ஆவார் படைப்புக் காலத்து அயனால் படைக்கப் பட்டதோர் கடவுட் சாதி என்பது பரிமேலழகர் உரை. வள்ளுவப் பெருந்தகை தென்பு லத்தார், தெய்வம் என வைத்த வைப்புமுறையும் இதனை உணர்த்து வதாகவே தெரிகிறது.

குடும்பத்தில் இறந்து போன வரின் ஆன்மாக்களை நற்கதி அடைவிக்கச் செய்யும் சிறந்ததோர் கடமையாக இது கருதப்படுகிறது. "இறந்தார்க்கு நீர்க் கடன் முதலியன செய்து நல்ல உலகின் கண் செலுத் தலானும் துணை என்றார்" என்னும் பரிமேலழகர் உரையாலும் இது விளங்கும். இல்லறத்தில் உள்ளவர் செய்யும் இத்தென்புலத்தாருக்குரிய கடன்களைப் பயனுள்ளவாறு செய் வதற்குச் சிறப்புடைய நாள்களாகச் சில நாள்கள் வகுத்துரைக் கப்பட்டுள்ளன. அவற்றுள் சிறந்த தாகக் கருதப்படுவது அமாவாசை நாளாகும். அத்துடன், இக்கட மையைச் செய்வதற்கெனச் செயன் முறையும் வேறு கூறப்பட்டுள்ளது. முறைதெரிந்து இதனைச் செய்வதற்கு, உலக முயற்சிகளில் உள்ளார் பலருக்கு வாய்ப்பு இல்லா மையாலோ, அன்றி இயலாமை யாலோ, பிற யாது காரணத்தாலோ முறையறிந்து செய்விக்கும் குருக்கள் மார் துணையோடு, இதனைப் பொருள் விளங்காமலேயே பலகால மாகச் செய்து வருகின்றனர்.

வருவாய் ஒன்றே பொரு ளாகக் கொண்டு, முறைமையைப் பொருளாகக் கருதாதே கடன்க ழிக்கும் குருக்களே பெருகி விட்ட இக்காலச் சூழ்நிலையில் உண்மை யாகத் தென்புலத்தார் கடனைப் பொருளறிந்து முறையோடு செய்ய விரும்புவார்க்கு இக்கடமையின் பயனும், பயன்படச் செய்யும் முறைமையும் அறிந்து செய்ய வழித்துணை ஒன்று தேவைப்படு கிறது. அத்தகைய வழித்துணையாக அமைவது யாழ்ப்பாணம் வில் லூன்றி, புனித தீர்த்த பரிபாலன சபையினர் வெளியிட்டுள்ள அமாவாசை தர்ப்பணம் என்னும் ஓர் கையடக்க நூலாகும். தமிழ் நாட் டினர்க்கும் பயன்படுமாறு செய்யும் நோக்கத்தில் அதன்படியொன்று இங்கு தரப்படுகிறது. *

# SAIVAISM

*(continued from Page 16)*

traders, farmers potters, hunters, fishermen and untouchables. There were also women among them. Periyapuranam is a perpetual reminder to the Tamil race that God's love and salvation are quite independent of caste, profession or sex. Here I can do no better than quote two simple lines from the work of Saint Thirumoolar:

***"Love and God are differ -ent, sayeth the fools; That Love alone is God no one knows."***

Commenting on this beautiful saying, the late Prof. Romanes exclaimed, "What has all the science and philosophy of the world done for the thought of mankind to be compared with the one doctrine that God is Love?"

The Periapuranam giving the biographical sketches of the 63 saints is an inspired and inspiring work by a mystical poet Sekkilar of the 12th century. Only a poet-saint could have conceived such a beautiful poetical work which adds lustre to the illustrious lives dealt with. Most of them are Supreme exemplars of the highest form of devotion to Siva. Cheraman Perumal Nayanar was from the royal family of Kerala. He was a friend of St. Sundaramurthi, who composed the original Pathikam at Tiruvarur, giving the names of the sixty three Nayanars. Tradition says that he was inspired to compose his Thiru Thonda Thokai by the sight of a vast assemble of Siva's devotees at the hall of Tiruvarur. However, it is safe to presume that he was influenced by the poems of St. Thirumoolar in regard to the worship of Saints as the surest and safest path to salvation. The latter's name is in his list. In thanking his friend and Guru, Sundarar, for helping him to reach the Lord's Abode (Heaven), Cheraman had uttered a great truth in saying that even if the devotee is sinful and undeserving, if he is devoted to a Saint, he would also gain a place in the Kingdom of God.

***(to be continued)***

## சைவ சமயப் பெருநாட்கள்

(ஆடிப்பூரணை முதல் ஆவணிப் பூரணை வரை)

| | | | | |
|---|---|---|---|---|
| ஆடி | 08 உ | 24.07. 2002 | புதன் | பூரணை விரதம் |
| | 12 உ | 28.07 .2002 | ஞாயிறு | சங்கடஹர சதுர்த்தி |
| | 17 உ | 02.08 .2002 | வெள்ளி | கார்த்திகை விரதம் |
| | 21 உ | 06.08 .2002 | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| | 23 உ | 08.08 .2002 | வியாழன் | ஆடி அமாவாசை விரதம் |
| | 26 உ | 11.08 .2002 | ஞாயிறு | ஆடிப்பூரம் |
| | 27 உ | 12.08 .2002 | திங்கள் | சதுர்த்தி விரதம் |
| | 28 உ | 13.08 .2002 | செவ்வாய் | ஷஷ்டி விரதம் |
| | 29 உ | 14.08 .2002 | புதன் | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை |
| ஆவணி | 01 உ | 17.08 .2002 | சனி | ஆவணி மாதப் பிறப்பு |
| | 04 உ | 20.08 .2002 | செவ்வாய் | பிரதோஷவிரதம் |
| | 05 உ | 21.08 .2002 | புதன் | நடேசர் அபிஷேகம் |
| | 06உ | 22.08 .2002 | வியாழன் | பூரணை விரதம். |

## *இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகள்*

*அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினர் நடத்தும் மேற்படி தேர்வுகள் 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மூன்றாம் வாரத்தில் நடைபெறவுள்ளது.*

*விண்ணப்ப இறுதித் நாள்: 31.08.2002*

*இத்தேர்வுகளுக்கு ஆயத்தம் செய்யவும் மாணவர்களுக்கான வகுப்புகள் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் 2002 செப்ரம்பர் இரண்டாம் வாரம் முதல் நடைபெறும்.*

*மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் பின்கண்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.:*

*சைவப்புலவர் வ. கந்தசாமி, தேர்வுச் செயலாளர், 125, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

# SAIVAISM

## - Late Mr. K.Ramachandra,Editor: 'Religious Digest'-

(This Article is an abridged version of one of the eight discourses on Hinduism delivered by Late Mr.K. Ramachandra in Colombo in 1971 to Sixty four Roman Catholic Nuns. All the eight lectures were published in 1971 in England and Colombo under the title **Hinduism in a Nutshell by Machandra Publications)**

**(continued from Book 113 No:3)**

The eternal entities are three in Saivaism, namely, Pathi, Pasu and Pasam, - God, Soul and Matter. They have neither beginning nor end. This is the central doctrine of Saivaism. The foremost postulate of Saiva Siddhanta philosophy is: " Something cannot come of nothing or become nothing." Its first corollary is: "that whatever is further unanalysable cannot undergo any change." This is a unique scientific statement. At the dawn of the 20th century, the scientists held the view that an atom was indivisible. It was therefore not expected to undergo change. But recent discoveries have revealed that an atom has components, and in the near future, it is not unlikely that these components may be resolved into more minute components. When the scientists ultimately reach the point beyond which there can be no further analysis, they are sure to discover the existence of a component which is not subject to any change. On such a basis is founded the Siddhanta doctrine that the world is something real and not an illusion.

Since living beings are unlimited, souls are also numberless. Saivaism divides souls into three distinct groups, Sakalar, Pralayakalar and vignanakalar, according to the degrees of the force of the Anavic grip. This Anava is one of the three bondages of the souls, the other two being Karma (action) and Maya. Maya is the source of supply of energy for the souls to know, to will and to do. Umapathisivam succintly explains this idea in the second couplet of his work, **Thiruvarulpayan:** "The power of God (Siva - Sakthi) works for the upliftment of all souls to the condition of God Himself." But Anava fosters the feelings of I-ness and My - ness, and blocks the passage and prevents the full flow of the energy that is offered by Maya.

The very word 'Anava' is a significant one, derived from the word 'Anu', - an atom. It literally means that which tends to make the soul's powers indefinitely small. In simpler words the feelings of I - ness and My - ness are the cause of all the misery in the world. All the wrong deeds witnessed are due to a special value being attached to oneself and to one's possessions, applying one law to one's own self, and a different one to others. However, the world is ever bent on teaching a lesson to the wrong - doers. This is strictly under Karma, the Law of cause and effect.

The ultimate goal of every soul is becoming one with God. This is possible only when the soul has attained liberation from Anava, liberation from maya and liberation from Karma (action). I do not wish to further burden your brains with the metaphysics of Saivaism. I hope I have given you a few simple ideas for you to understand something of Saiva Siddhanta.

Sankhya philosophy mentions twenty five Tattvas or principles which constitute the world. The Saiva Siddhanta analyses them into thirty six, naming the 36th, which is the highest and subtlest, as Nada Tattvam or Nada Brahman. This is just below God or Sivam, and mystical poets are wont to characterise itself as God and propitiate it through devotional songs, which consists of sound or music. The four Samayacharyas Sambhandar, Appar, Sunderar and Manickavasagar, are votaries of Siva in His aspect of Supreme sound or Para Nadam. The Thevara Hymns of the first three, and the Thiruvachakam of the fourth saint are used in the worship of Siva in all temples. We are now discussing the second category of the Saiva literatures. These are known as Tirumurais. These devotional poems from the most important landmark in Tamil literature beginning from the 6th century, releasing forces of Hindu regeneration and of the elimination of Jain and Buddhist influences in South India. They were arranged into eleven Thirumurais, including the work of the great mystic Thirumoolar, as the tenth. In addition to them, there is also the Periapuranam( the great Puranam) dealing with the biographies of the sixty three Saints who are held in veneration even today.

These Saints belong to different castes; - brahmins, kings

*(continued to Page 15)*

Edited & Published by Professor R. Kumaravadivel on behalf of the Saiva Paripalana Sabai - Jaffna of 450, K.K.S. Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K.K.S. Road, Jaffna 24.07.2002 (Fullmoon Day).